டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 25.9.2024 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 083 - Madurai | Online Edition

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாநில அளவிலான உழவர் தின விழா 2024

கோயம்புத்தூர், செப்.24

நாளை ‘செப்டம்பர் 26 முதல் 29 வரை நான்கு நாட்கள் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் கண் காட்சி மற்றும் கருத்துக்காட்சி திடல்கள் அமைக்கப்பட்டு, மாநில அளவிலான உழவர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் 255 கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வரங்கில் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண்மை அறிவியல் நிலையங்கள், வேளாண்மை உழவர் நலத்துறை, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், வேளாண் வாரியங்கள், நபார்டு வங்கி, தொண்டு நிறுவனங்கள், இடுபொருள் விற்பனையாளர்கள், தனியார் நிறுவனங்கள், உழவர் உற்பத்தி யாளர் நிறுவனங்கள், விரிவாக்கச் சேவை நிறுவனங்கள், புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவோர், கால்நடை, மீன் வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் வேளாண் விற்பனை சார்ந்த அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தின் மூலம் இந்த ஆண்டு வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள், பண்ணைக் கருவிகள், தொழில் நுட்பங்கள், மாதிரி ஒருங்கிணைந்த பண்ணையம் முறைகள், அங்கக வேளாண்மை சாகுபடி உத்திகள், தானியங்கி விவசாய கருவிகள் மற்றும் பண்ணைக் கருவிகளின் மாதிரித் திடல்கள் ஆகியவை பல்கலைக்கழகத்தின் கிழக்குப் பண்ணையில் நேரடி செயல்விளக்கத்துடன் காட்சிப்படுத்தப்பட உள்ளது.

நவீன வேளாண்மையினை கடைபிடிக்க நான்கு நாட் களுக்கும் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காலை மற்றும் மாலை நேரங்களில் தலா இரண்டு தொழில் நுட்ப

கருத்தரங்கம் பல்கலைக்கழக வல்லுநர்கள் மற்றும் சிறந்த தொழில்நுட்ப ஆலோசகர்கள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இச்சிறப்பு மிக்க உழவர் தின விழாவினை வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக இணைவேந்தர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கண்காட்சியை திறந்து வைத்து ஆறு (6) உழவர் பெருமக்களுக்கு வேளாண் செம்மல் விருது வழங்கி உழவர் தின விழாப் பேரூரையாற்ற உள்ளார். இந்த விருதினை சி.ஆர்.ஐ பம்பு நிறுவனம் நிதியுதவி அளிக்கின்றது.

மேலும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்புரையாற்றவுள்ளார்.

அபூர்வா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலாளர், வேளாண்மை – உழவர் நலத்துறை, உழவர் தின விழா முன்னிலையுரையாற்றவும் இசைந்து உள்ளார்.

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சகத்தின் அனைத்துத் துறை தலைவர்கள், முனைவர் ஷேக் நா.மீரா, இயக்குநர், வேளாண் தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சிக் கழகம், ஐதராபாத், இரா.ஆனந்த், தலைமை பொது மேலாளர், நபார்டு வங்கி, சென்னை மற்றும் டி.ராம் மேகன் ரெட்டி, துணை பொது மேலாளர், இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம், புதுடெல்லி ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், துணைமேயர், மேற்கு மண்டல தலைவர், இந்த பகுதி மாமன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளார்கள்.

இவ்விழாவின் நிகழ்வுகள், விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் தொழில் முனைவோர்கள், பண்ணை மகளிர், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# மாநில அளவிலான உழவர் தின விழாவிற்கு சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலையம் சார்பில் விவசாயிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடு

திருச்சி, செப்.24

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுமணி கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு நவீன தொழில்நுட்பங்கள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நடத்தும், மாநில அளவிலான உழவர் தின விழா 2024 வருகின்ற செப்டம்பர் மாதம் 26 ம் தேதி முதல் 29ம்தேதி வரை, நான்கு நாட்களுக்கு பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற உள்ளது.




இந்நிகழ்ச்சிக்கு திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களை கரும்பு ஆராய்ச்சி நிலையம் சார்பில் 60 விவசாயிகளை 2 நாட்களுக்கு (27.09.24 - 30 விவசாயிகள், 28.09.24 - 30 விவசாயிகள்) அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலையத்தை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் விபரங்களுக்கு 91717 17832, 94426 57405 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளவும். மேற்கண்ட தகவல்களை கரும்பு ஆராய்ச்சி நிலைய இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சி.ராஜாபாபு (91717 17832) தெரிவித்தார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விதைப்பண்ணை அமைத்து தரமான விதை உற்பத்தி செய்திட விவசாயிகளுக்கு பயிற்சி



தஞ்சாவூர், செப்.24

தஞ்சாவூர் வட்டாரத்தில் விதை உற்பத்தி பதிவு செய்யும் விவசாயிகளுக்கு தஞ்சாவூர் மாவட்ட விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை மூலம் ஒரு நாள் தொழில்நுட்ப பயிற்சி குருவாடிப்பட்டி கிராமத்தில் 24.9.24 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் தஞ்சாவூர், விதைச்சான்று அலுவலர் (தொ.நு) எஸ்.ஹசீனாபேகம் விதையின் முக்கியத்தவம், விதைப்பண்ணை பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் முறைகள் குறித்த விளக்கினார். அம்மாப்பேட்டை, விதைச்சான்று அலுவலர் க.பிரபு, விதைப்பண்ணையில் ஒவ்வொரு கட்டத்திலும் கலவன்கள் அற்ற விதைகளை உற்பத்தி செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து எடுத்தரைத்தார்.

பூதலூர், விதைச்சான்று அலுவலர் ஜ.மகேஸ்வரி, விதைச் சுத்திகரிப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்படும் சுத்திகரிப்பு பணி மற்றும் சான்றட்டை பணி குறித்து விளக்கினார்.

தஞ்சாவூர், விதைச்சான்று அலுவலர் ச.சங்கவி, விதைப் பண்ணைகளில் களை நிர்வாகம், உர மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் நிர்வாகங்கள் குறித்த தொழில் நுட்பங்களை கூறி அவற்றை உரிய காலத்திலும் தகுந்த அளவையும் பயன்படுத்தி விதைப் பண்ணை விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற்ற இலாபம் பெற வேண்டும் என்று எடுத்துக் கூறினார்.

மேலும், தஞ்சாவூர் வட்டார வேளாண்மை அலுவலர் பொ.தினேஷ்வரன், குறுகிய கால துவரை பயிர் சாகுபடி மூலம் பயிர் சுழற்சி செய்வது குறித்தும் உயிர் உர பயன்பாட்டு முறை மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினார்.

இந்த பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி விதை அலுவலர் ஞ.ராபர்ட் பெல்லார்மென் மற்றும் இரா.கி.சரவணன் செய்திருந்தார்கள். இப்பயிற்சியில் தஞ்சாவூர் வட்டாரத்தைச் சார்ந்த அனைத்து விதைப்பண்ணை விவசாயிகள் கலந்த கொண்டு பயன் பெற்றனர் என தஞ்சாவூர், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் து.கோபாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 24.09.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 36 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 48 | 52 | 57A | உருளை(ஊட்டி) | 48 | 52 |
| 2 | வெண்டை | 25 | 30 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 32 | 36 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 25 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 30 | 34 | 60 | கேரட் | 55 | 60 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 30 | 35 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 48 |
| 6 | புடலை | 25 | 28 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 25 | 30 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 18 | 22 |
| 9 | பாகற்காய் | 30 | 35 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 25 | 28 | 66 | காளிபிளவர் | 40 | 45 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 34 | 69 | இஞ்சி | 55 | 136 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 34 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 44 | 48 | 71 | பென்னி பீன்ஸ் | 55 | 60 |
| 16 | பெ.வெங்காயம் | 46 | 59 | 72 | குடமிளகாய் | 48 | 55 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 25 | 28 | 73 | ஊட்டி அவரை | 120 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 55 | 74 | பஜ்ஜி மிளகாய் | 40 | 45 |
| 19 | முருங்கை | 65 | 70 | 71A | | | |
| 20 | தேங்காய் | 42 | 45 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 60 | 65 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 135 | 144 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 38 | 42 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 95 | 98 | 80 | திராட்சை | 80 | 90 |
| 30 | புதினா | 10 | 11 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 65 | 70 |
| 40 | கோவக்காய் | 25 | 28 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 16 | 20 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 30 | 35 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 35 | 40 | | | | |

# மானிய விலையில் திரவ உயிர் உரங்கள்

கள்ளக்குறிச்சி, செப்.24

உயிர் உரங்கள் என்பவை ஒன்று அல்லது மேற்பட்ட பயிர்களுக்கு நன்மை செய்யும் நுண்ணுயிர்களைக் கொண்ட உயிரியல் ரீதியாக செயல்படும் தயாரிப்புகள் ஆகும். இவை பயிர்களுக்கு கிட்டா நிலையில் உள்ள பேரூட்ட, இணையூட்ட மற்றும் நுண்ணூட்ட சத்துக்களை எளிதில் கிட்டும் நிலைக்கு மாற்றி அளிப்பவையாகும். பயிர்களுக்கு தேவையான ஊட்டச் சத்துக்களை அளிப்பதில் பெரும் பங்களிக்கிறது.

திரவ பொட்டாஷ் மண்ணில் கட்டுண்டு கிடக்கும் சாம்பல் சத்தினை கிரகித்து பயிர்களுக்கு எளிதில் கிடைக்க வழிவகைச் செய்கிறது. குறிப்பாக பயிர் வளர்ச்சி ஊக்கிகளை சுரந்து பயிர்களின் வளர்ச்சிக்கும் அதிக மகசூல் கிடைக்கவும் உதவுகின்றது. திரவ உயிர் உரங்கள் அனைத்து பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். விதை நேர்த்தி செய்ய 50 மிலி திரவ உயிர் உர உரத்தை, தேவையான அளவு ஆறிய அரிசி கஞ்சியுடன் ஒரு ஏக்கருக்கான விதையுடன் கலந்து 30 நிமிடங்கள் நிழலில் உலர்த்திய பின்னர் விதைக்கலாம். நேரடியாக வயலில் இட ஒரு ஏக்கருக்கு 200 மிலி திரவ உயிர் உரத்தை 20 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து நடவுக்கு முன்னர் வயலில் இடவும் அல்லது நீர் வழி உரமிட ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மிலி திரவ உயிர் உரத்தை (200 மி.லி/ஏக்கர்) விதைப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 15, 30 மற்றும் 45 நாட்களில் உபயோகிக்கலாம்.

திரவ உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் பயிர் வளர்ச்சியினைத் தூண்டும் ஹார்மோன்கள் உயிர் உரங்களின் செயல்பாட்டின் மூலம் கிடைக்கின்றன. பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இருந்து பயிர்களை பாதுகாக்க செய்கிறது. உயிர் உரங்களின் பயன்பாடு சாகுபடி செலவை குறைப்பதோடு இரசாயன உரங்களின் பயன்பாட்டினையும் குறைக்கிறது. பயிர்களின் வேர் பகுதியில் பிற நன்மை செய்யும் நுண்ணுயிரிகளின் பெருக்கத்தினை ஊக்குவிப்பதோடு மண்ணில் மக்கின் அளவை சீராக பாராமரிப்பதில் மண்ணின் நயம் மற்றும் மண்வளத்தை பாதுகாக்கின்றன.

இயற்கையுடன் ஒன்றி வாழக்கூடியவை. ஆதலால் சுற்றுப்புற மாசுபாட்டினை கட்டுப்படுத்த உதவுகின்றன.

இம்மாவட்டத்தின் அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் மற்றும் தேசிய எண்ணெய் வித்துக்கான இயக்கத்தின் கீழ் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. இவ்வாறு பல்வேறு நன்மை தரக்கூடிய திரவ உயிர் உரங்களை மானிய விலையில் விவசாயிகள் பெற்று பயனடையுமாறு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அசோக்குமார் கேட்டுக்கொண்டார்.



# லாபகரமான முறையில் வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு விவசாயிகள் கண்டுணர்வு பயணம்



புதுக்கோட்டை, செப்.24

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்க திட்டங்ளின் சீரமைப்பு திட்டம் 2024-2025 கீழ் அறந்தாங்கி வட்டாரத்தில் லாபகரமான முறையில் வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு தொழில்நுட்பம் சார்ந்த உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் கண்டுணர்வு பயணம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கற்றறிவு பயணத்தில் அறந்தாங்கி வட்டாரத்தை சேர்ந்த 50 விவசாயிகளை புதுக்கோட்டை புத்தாம்பூர் முருகையா பரண்மேல் ஆடு வளர்ப்பு பண்ணைக்கு அழைத்துச் சென்று அங்கு ஆடு வளர்ப்பு முறைகள் பற்றி கற்பிக்கப்பட்டது. பண்ணை உரிமையாளர் சசிகலா, லாபகரமான முறையில் வெள்ளாடு வளர்ப்பு பற்றி எடுத்துரைத்தார்.

அவர் மேலும் கூறுகையில் வெள்ளாடு பராமரிப்பில் ரகத் தேர்வு பரன் அமைப்பு மற்றும் நோய் தடுப்பு முறைகள் பற்றி எடுத்துக் கூறினார். ஆடு வளர்ப்பில் தீவனப் பங்கு பற்றியும் பசுந்தீவன உற்பத்தி பற்றியும் விவசாயிகளின் கேள்விகளுக்கு சிறப்பான முறையில் பதிலளித்தார்.

இந்தக் கண்டுணர்வு பயணத்தில் கலந்து கொண்ட விவசாய பெருமக்கள் அங்கு வளர்க்கப்பட்ட வெள்ளாடுகள் வளர்ப்பு முறையை நேரடியாக பார்வையிட்டனர். பசுந்தீவன ஃபுல் ரகங்களை பார்வையிட்டது போன்ற வியங்கள் மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக கூறினார்கள்.

இந்த கண்டுனர்வு பயணத்தை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன் மற்றும் உதவித் தொழில்நுட்ப மேலாளர் ஆனந்தன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நாமக்கல் உழவர் பயிற்சி நிலையம் சார்பில் கிராம அமைப்பாளர்களுக்கு பயிற்சி முகாம்



நாமக்கல், செப்.24

நாமக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கூட்டரங்கில் நாமக்கல் மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் சார்பாக கிராம அடிப்படை பயிற்சி, கிராம அமைப்பாளர் களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. பயிற்சியில் 20 அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியில் நாமக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சித்ரா வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல்துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, பட்டு வளர்ச்சித்துறை, வனத்துறை போன்ற துறை சார்ந்த மானியங்கள், தொழில்நுட்பங்களை வழங்கிட கேட்டுக் கொண்டு பயிற்சியினை துவங்கி வைத்தார்.

இப்பயிற்சியில் நாமக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சித்ரா, வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் பாலாஜி, கால்நடை உதவி மருத்துவர் நித்யா, வனத்துறையின் வனவர், இரமேஷ், மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் தரண்யா, பட்டு வளர்ச்சித் துறை உதவி ஆய்வாளர் சாந்தி, தோட்டக்கலை உதவி தோட்டக்கலை அலுவலர் கணேசன் மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறையின் உதவி வேளாண்மை அலுவலர் மலர்கொடி ஆகியோர் தங்களது துறையின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விளக்கமளித்தார்கள்.

இப்பயிற்சியில் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் சுதாகர் மற்றும் தொழில் நுட்ப மேலாளர் ஹரிஹரன் பயிற்சியின் ஒரு பகுதியாக வருகை புரிந்த கிராம அமைப் பாளர்களுக்கு உயிர் உர விதை நேர்த்தி மற்றும் டிரைகோ டெர்மா விரிடி விதை நேர்த்தி செய்து காண்பித்து விளக்க மளித்தனர்.

இப்பயிற்சியில் அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் இரமேஷ் மற்றும் தொழில் நுட்ப மேலாளர் கவிசங்கர் ஆகியோர் வருகைபுரிந்த விவசாயிகளுக்கு நன்றி கூறி, பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# மக்காசோளத்தில் படைப்புழு மேலாண்மை கையாளுவது எப்படி தெரியுமா?



உலக அளவில் கோதுமை, நெல் பயிரைவிட கூடுதலான நிலப்பரப்பில் பயிரிடப்படும் ஒரே பயிர் மக்காசோளமாகும். உலக அளவில் 123 கோடி டன் உற்பத்தியாகின்றன. மக்கா சோள பயிரின் தாயகமாக மத்திய அமெரிக்கா குறிப்பாக மெக்சிகோவாக இருந்தாலும் உலகின் எல்லாவிதமான பகுதியிலும் உற்பத்தியாகின்றன.

**மக்காசோளத்தில் படைப்புழு?**

அமெரிக்கவை தாயமாக கொண்ட பால் ஆரமி வாம் (FALL ARMY WARM) இதனுடைய அறிவியல் பெயர் (SPODOP TERA FRUGI PERDA) என்ற வெளிநாட்டு வரவினம் நம்முடைய நாட்டிற்கு 2016யில் கர்நாடகாவில் சிவமுகா பகுதியில் முதன்முறையாக தென்பட்டுள்ளது. தற்போது நாடு முழுவதும் இதனுடைய தாக்குதல் பரவியுள்ளது.



**பூச்சியின் வாழ்கை பருவம்?**

10-15 நாட்கள் பயிரில் படைப்புழுவின் தாக்குதலை காணலாம்.

**வாழ்க்கை சரிதம்**

தாய் அந்துபூச்சி இலையின் அடிப்பகுதியில் கூட்டமாக கூட்டமாக 1000 முதல் 1500 முட்டைகள் இடுகின்றது. முட்டையிலிருந்து வெளி வரும் புழுக்கள் முதலில் இலையின் அடிப்பகுதியில் சுரண்டி சேதப்படுத்தும். இதனால் பயிர்கள் பச்சையம் இழுந்து இலைகள் வெண்மையாக காணப்படும். இப்புழுக்கள் ஒரு செடியிலிருந்து அடுத்த செடிக்கு பரவும். இப்புழுக்களின் ஆயுள் காலம் 30-35 நாட்கள் ஆகும். இதனாலே ஒரே பயிரை சாகுபடி செய்யாமலே பயிர் சுழற்சி முறையை கையாள வேண்டும்.

இரவு நேரத்துல தான் படை புழுக்கள் அதிகமான சேதத்தை விளைவிக்கும். புழுக்கள் இலையுறையினுள் சென்று, பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் இலைகள் விரியும் போது அதில் வரிசையாக ஓட்டைகள் (HOLS) தென்படும். கதிர்கள் வரை படைப்புழுவின் தாக்கம் இருக்கும், மக்காசோள விவசாயிகளுக்கு இது தான் பெரிய பிரச்சனையாக உள்ளது என்றால் மிகையல்ல.

**ஒருங்கிணைந்த முறையில் படைப்புழுவை கட்டுப்படுத்துவது எப்படி?**

1) மக்காசோளம் விதைக்கும் நிலத்தில் அடியுரமாக ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடவேண்டும்.

2) விதைநேர்த்தியாக ஒரு கிலோ விதைக்கு உயிர் பூச்சி கொல்லியான பேவரியானா பேசியானா மருந்தை 10 கிராம் என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும்.

3) சூரியகாந்தி, எள், தட்டைப்பயறு போன்ற பயிர்களை வரப்பு பயிராகவும், உளுந்து, கொத்தவரை, செண்டுமல்லி போன்ற பயிர்களை ஊடுபயிராகவும் விதைக்க வேண்டும்.

4) ஏக்கருக்கு 5 எண்ணம் இனக்கவர்ச்சி பொறியை வைக்க வேண்டும்.

5) 20-25 நாட்களில் முதற்கட்ட மருந்தாக அசாடிராக்டின் 1000 PPM 20மிலி / 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது பேவரியா பேசியனா 50 கிராம் / 10 லிட் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

6) 40-45வது நாட்களில் இமெக்டின் பென்சோட் / கோரசின் மருந்தை 4 மி.லி /10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

7) பயிற் சுழற்சி முறையை கையாள வேண்டும்.

8) ஆரம்ப காலங்களில் வீரியமுள்ள மருந்தை தெளிக்காமல் படிப்படியாக மருந்தின் வீரியத்தை கூட்ட வேண்டும்.

9) கோடை உழவு நன்றாக கட்டிகள் இல்லாதவாறு உழது மண்ணில் உள்ள கூட்டுபுழுக்களை அழிக்க வேண்டும்.




இவ்வாறாக ஒருங்கிணைந்த முறையில் தான் இந்த படைப்புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்தி நல்ல மகசூல் எடுக்க முடியும்.

தற்போது மக்காசோளத்திலிருந்து எத்தானால் எடுப்பதால் அதிக டிராமண்ட் உள்ளது. எனவே நல்ல விலை கிடைக்கும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# அட்மா திட்டத்தில் அங்கக வேளாண்மை குறித்த கண்டுணர்வு சுற்றுலா

அரியலூர், செப்.24

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின்கீழ் அங்கக வேளாண்மை குறித்த விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலாவாக விவசாயிகள் 50 பேர் புதுக்கோட்டையில் அமைந்துள்ள புதுக்கோட்டை இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் கம்பெனிக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

இப்பயிற்சியில் புதுக்கோட்டை இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் கம்பெனியின் தலைமை நிர்வாக அலுவலர் அகிலா, விவசாயிகளிடத்தில் பேசுகையில், எங்கள் உழவர் உற்பத்தியாளர் கம்பெனியில் உள்ள அனைத்து விவசாய உறுப்பினர்களும் தங்கள் வயல்களில் தீங்கு விளைவிக்கும் இரசாயன உரங்களை தவிர்த்து, நன்மை விளைவிக்க கூடிய இயற்கை உரங்கள், உயிர் உரங்கள் மற்றும் அங்கக இடுப் பொருட்களை கொண்டு விளைப்பொருட்களை விளைவிக் கின்றனர். இந்த பொருட்களை நாங்கள் வாங்கி மதிப்பு கூட்டி விளைப் பொருட்களை சந்தைப்படுத்தும் போது இரண்டு மடங்கு இலாபத்தை பெறலாம் எனக்கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், இயற்கை இடுப்பொருட்கள் கொண்டு மண்ணின் வளத்தை காப்பதன் மூலம் சத்தான ஆரோக்கியமான உணவுப்பொருளை எதிர்கால சந்ததினர்க்கு கொடுக்க நாம் அனைவரும் அதற்கான வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் அங்கக வேளாண்மை மூலம் பாரம்பரிய இரகங்கள் மற்றும் சிறுதானியங்களில் பயிர் சாகுபடி செய்யும்போது, குறைந்த செலவில் அதிக மகசூலை பெறலாம் எனக் கூறினார். இப்பயிற்சியில் இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட பாரம்பரிய இரகங்கள், சிறுதானியங்கள் மற்றும் மதிப்பு கூட்டி விற்பனைக்கு வைக்கப்பட்ட விளைப்பொருட்களை பார்வை யிட்டனர்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன் செய்திருந்தார்.

# உள் மாநில அளவிலான விவசாயிகள் பயிற்சி

திருச்சி, செப்.24

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரம், விவசாயி களுக்கு உள் மாநில அளவிலான விவசாயிகள் பயிற்சி இயற்கை வேளாண்மை / அங்கக வேளாண்மை என்ற தலைப்பில் கோயம் புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை மையத்தில் 3 நாள் பயிற்சி நடைபெற்றது. பயிற்சியில் முனைவர் ராமசுந்தரம் மண்ணை பழைய நிலைக்கு கொண்டு வர இயற்கை வேளாண்மை தேவைப் படுகிறது எனக் கூறினார். ரசாயனம் இல்லாத விவசாயத்தின் மகத்துவங்களை எடுத்துக் கூறினார். முனைவர் கவினோ தோட்டக்



கலை உதவி பேராசிரியர் பயிர் மூடாக்கு தொழில்நுட்பங்கள் மூலம் மண்ணிற்குள் ஏற்படும் பல்லுயிர் பெருக்கங்கள் பற்றி விவசாயி களுக்கு எடுத்துக் கூறினார்.



தோட்டக்கலை பயிர்களில் இயற்கை/அங்கக வேளாண்மை தொழில்நுட்பங்கள், முக்கியத்துவம் பற்றி விரிவாக விளக்கிக் கூறினார். முனைவர் பரமேஸ்வரி சுற்றுச்சூழல் அறிவியல் உதவி பேராசிரியர் இயற்கை/அங்கக வேளாண்மை செய்வதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபாட்டிலிருந்து தவிர்க்கப்படுகிறது என்பதை பற்றியும், மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் அங்கக வேளாண்மையில் பயிரிட அனுமதிப்பதில்லை எனவும் கூறினார். அடுத்தாக பேசிய நம்மாழ்வார் இயற்கை மைய தலைவர் கிருஷ்ணன் இயற்கை/ அங்கக வேளாண்மை அவசியங்கள் பற்றி தெளிவாக எடுத்துக் கூறினார். ஜீவாமிர்தம், மீன் அமிலம், பழக்கரைசல், கனஜீவா மிர்தம், பஞ்சகாவியம், முட்டைக் கரைசல், மற்றும் 3ம் கரைசல் தயாரிக்கும் முறைகள், பயன்படுத்தும் முறைகள் பற்றியும் விரிவாக விளக்கிக் கூறினார். அடுத்ததாக முனைவர் ஜானகி மண் அறிவியல் பேராசிரியர் ஊட்டச்சத்து மேலாண்மை பற்றி கூறினார். மண் வளத்தை மேம்படுத்துதல் மற்றும் முக்கியத்துவம் பற்றி விரிவாக விளக்கிக் கூறினார். ஆட்டு எரு முக்கியத்துவம் மற்றும் கடலை புண்ணாக்கு முக்கியத்துவம், பயன்படுத்தும் முறைகள் பற்றியும் விரிவாக விளக்கிக் கூறினார். மேலும் ஊடுபயிரின் முக்கியத்துவம், இயற்கை /அங்கக வேளாண்மை முறைகள் மூலம் நன்மை செய்யும் பூச்சிகள் அதிகரிக்கும் எனவும், மண் வளமாக உள்ளதா என்பதை கண்டறியும் முறைகள் பற்றியும் விவசாயி களுக்கு விரிவாக விளக்கிக் கூறினார். திவாகர் பண்ணை மேலாளர் இயற்கை/அங்கக வேளாண்மை இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகள் பற்றி செய்முறையாக செய்துக் காட்டினார். அடுத்ததாக ஈஈ அங்கக விவசாய இயக்கம் சார்பில் கோவை செம்மேடு பகுதியில் மாதிரி பண்ணைகளை உருவாக்கி பராமரித்து வருகின்றனர். அப்பண்ணையில் விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது. பயிற்சியில் தேவ், பண்ணையின் பொறுப்பாளர் கூறுகையில் பண்ணையில் நாங்கள் இயற்கை வேளாண்மை முறையில் பயிர் சாகுபடி செய்து இப்பண்ணையில் வெற்றிகரமாகவும், லாபகர மாகவும் விவசாயம் செய்து முன்னோடி விவசாயிகளாக மாறி உள்ளனர் என்று கூறினார். மேலும் அப்பண்ணையில் உள்ள 5 பிரிவுகள் மற்றும் அப்பிரிவுகளில் செய்யப்படும் இயற்கை/அங்கக வேளாண்மை முறைகள் பற்றி விரிவாக கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் சே.அபிராமி மற்றும் உதவி தொழில்நுட்ப வல்லுநர் அ.சிந்தியா செய்திருந்தனர்.


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
• அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
• பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
• மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# கோடைகாலத்தில் அதிக லாபம் தரும் தர்பூசணி சாகுபடி செய்திட தோட்டக்கலை துறை அழைப்பு

விழுப்புரம், செப்.24

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர் வட்டாரம், தென் பெண்ணை மற்றும் மலட்டாறு நீர் வளத்தில் சிறப்பாக செழிப்பாக விவசாயம் காணும் பகுதி. இதில் விவசாயிகள் அதிகமாக நெல் சாகுபடி செய்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவ்வாறு ஒரே பயிரினை சாகுபடி செய்வதால் ஊட்டச்சத்து தொய்வு மற்றும் மண்வளம் முற்றிலுமாக பாதிக்கப்படும்.

மண்ணில் நச்சுத்தன்மை அதிகமாக தங்கிவிடும். எனவே விவசாயிகள் கண்டிப்பாக பயிர் சுழற்சி முறையை கையாள வேண்டும். ஒரு வருட பயிர் சாகுபடியில் ஒருமுறை நெல் சாகுபடி செய்தால் மறு முறை எண்ணெய் வித்துக்கள் அல்லது பயிறு வகைகள் அல்லது தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்திடல் வேண்டும். இது மண்வளத்தினை பாதுகாப்பதுடன் அதிக சுற்றுசூழல் மேம்படுதிடவும் மற்றும் விவசாயிகளுக்கு லாபத்தையும் கொடுக்க வல்லது. அப்படிப்பட்ட தோட்டக்கலை பயிரினை ஒருபோகும் சாகுபடி செய்திட தேர்ந்தெடுக்கும் வகையில் மணற்பாங்காண நிலம் கொண்ட விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை இந்த கடும் கோடை காலத்தை அதிக மகசூல் தந்து லாபத்தையும் தரக்கூடிய ஒரு ஒரு பயிராக தர்பூசணி சாகுபடியினை தேர்ந்தெடுக்க பரிந்துரை செய்கிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் 500 ஹெக்டர் அதிகமாக சாகுபடி செய்திடும் இப்பயிர் முகையூர், விக்கிரவாண்டி, மரக்காணம், ஒலக் கூர் வட்டாரங்களில் அதிகமாக சாகுபடி செய்யபடுகிறது. எனினும் திருவெண்ணைநல்லூர் வட்டாரத்தில் அதிகமாக விவசாயிகளால் விரும்பப்படுவது இல்லை. ஆனால் இப்பயிரினை சாகுபடி செய்வதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் கோடைகாலத்தில் ஏற்படும் இரட்டுப்பு லாபத்தினையும் விவசாயிகள் தெரிந்து கொள்வதன் மூலம் இப்பயிரினை சாகுபடி செய்து அதிக லாபம் குறைந்த பரப்பில் பெற இயலும்.

பொதுவாக தர்பூசணியானது தை பட்டம் எனப்படும் ஜனவரி மாதத்தில் சாகுபடி செய்து மார்ச் – மே உள்ளிட்ட கடும் கோடை காலங்களில் மக்களின் கோடை வெயில் தாக்கத்தினை உடலுக்கு குளிர்ச்சியும், நீர்ச்சத்தும் விவசாயிகளுக்கு அதிக அளவில் அதிக விலை, சந்தை மதிப்பும் கொடுக்கும்.

சாகுபடி தொழில்நுட்பம் குறித்து திருவெண்ணைநல்லூர் தோட்ட கலைத் துறை உதவி இயக்குநர் வளர்மதி கூறுகையில், அளவான உரம், அளவான நீரை பயன்படுத்தினால் தர்பூசணி விளைச்சலில், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து, பயிர்ப் பாதுகாப்பு மற்றும் நுனி கிள்ளுதல் முதலிய உத்திகள் மூலம் மகசூலை அதிகரிக்கலாம். அதிக நீர் தேங்காத, வளமான மண் உள்ள இடத்தில் தர்பூசணி நன்கு வளரும். அதிக பனியை தர்பூசணி தாங்காது. மித வெப்பம், அளவான ஈரப்பதம், நல்ல சூரிய ஒளி உள்ள காலத்தில் நல்ல விளைச்சல் கிடைக்கும். பழங்கள் முதிர்ச்சி அடையும்போது அதிக வெப்பநிலை இருப்பின் இனிப்புச் சுவையும் கூடுதலாக வாய்ப்பு உள்ளது. எனவே ஜனவரி, பிப்ரவரி, ஜூன், ஜூலை மாதங்களில் தர்பூசணியை சாகுபடி செய்ய வேண்டும்.

நேரடி விதைப்பில் ஐந்து முதல் ஏழு நாட்களுக்குள் விதைகள் முளைத்து விடும். நாற்றுகள் மூலமும் நடவு செய்திடலாம். பொது வாக பல ராகங்கள் இருப்பினும் உயர் மகசூல் தரும் இரகங்களே சிறத்தது. அந்த வரிசையில் டிராகன் கிங், மெலோடி (சிறிய பழ ரகம்), விஷால் (மஞ்சள் சதை கொண்ட பலம்) மிக சிறந்த விவசாயிகள் விரும்பும் ரகமாக உள்ளது. நிலத்தின் தன்மைக்கு ஏற்ப நீர் நிர்வாகம் செய்ய வேண்டும். அதே போன்று பழங்கள் அறுவடைக்கு தயாராக இருக்கும் தருணத்தில், நீர் பாய்ச்சக் கூடாது. அவ்வாறு பாய்ச்சினால் விற்பனைக்கு பழங்களை ஏற்றும் போது பழங்களில் வெடிப்பு ஏற்படும்.

குறைந்த காலப்பயிர் என்பதால் பூச்சி தாக்குதல் மிக குறை வாகவே உள்ளது. இயற்கை முறையில் பஞ்சகவ்யா மற்றும் அமுத கரைசலை தயார் செய்து சாகுபடிக்கு பயன்படுத்தலாம்.

சொட்டு நீர் பாசன அமைப்பின் மூலம் பூச்சி நோய் தாக்குதல், களைச்செடிகளை அறவே தவிர்க்க முடியும். மேலும் சொட்டுநீர் பாசனத்திற்கு சிறு விவசாயிகளுக்கு 100% மானியத்தில் ஒரு ஹெக்டருக்கு ரூ.1 லட்சத்து 35 ஆயிரத்து 855 தோட்டக்கலை துறை மூலமாகவே வழங்கப்படுகிறது.

நடவு செய்த நாளிலிருந்து 60 நாட்களில் பழங்கள் அறுவடைக்கு தயாராகிவிடும். குறைந்த நாட்களில் நிறைவான லாபம் தரும் தர்பூசணி சாகுபடிக்கு தோட்டக்கலை மூலம் ஒரு ஏக்கருக்கு ரூ.20000/- மதிப்பில் விதை மற்றும் இடுபொருள் மானியம் வழங்கப்படுகிறது.

எந்த பயிருக்கும் சந்தை மதிப்பே விவசாயிகளை சாகுபடி செய்திட தயக்கம் கொள்ள வைக்கிறது. தர்பூசணி விற்பனை சந்தை விழுப்புரம் மாவட்டத்தில் அதிகமாகவே உள்ளது.

கேரளா, பெங்களூர், சென்னை போன்ற இடங்களில் இருந்து வியாபாரிகள் மொத்தமாக பெற்றுக் கொள்கின்றனர். சீசன் காலங்களில் டன் பத்தாயிரம் குறைவில்லாமல் விற்பனை செய்திடலாம். தர்ப்பூசணி பயிர் செய்தால் 1 ஹெக்டருக்கு 25 டன் குறைவில்லாமல் பழங்கள் அறுவடை செய்யலாம். 3 மாதங்களில் இரண்டரை லட்சம் வரை எளிதில் லாபம் ஈட்டலாம். இதனை சாகுபடி செய்திட விரும்பிடும் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனை, விற்பனை வழிமுறை மற்றும் தோட்டக்கலை துறை சார்ந்த திட்ட மானியம் வழங்கிட தயாராக உள்ளது என தோட்டக்கலை துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஒரு நாள் தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது



தஞ்சாவூர், செப்.24

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு அருகே கிழக்கு பருத்திக்குடியில் விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு தஞ்சாவூர் மாவட்ட விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை சார்பில் ஒரு நாள் தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது. வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் லதா விதைப்பண்ணை விவசாயிகளுக்கு மாநில திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியத்தில் வழங்கப்படும் இடுபொருட்கள், மண்ணின் வளத்தை மேம்படுத்தி தரமான விதை உற்பத்திக்கு வழிவகுக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்.




தஞ்சாவூர் விதைச்சான்று அலுவலர் ஹசீனா விதைப் பண்ணை பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் விதையின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

தஞ்சாவூர் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் கோபாலகிருஷ்ணன் விதைப்பண்ணைகளில் களை நிர்வாகம், உர மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் நிர்வாகங்கள் குறித்த தொழில் நுட்பங்கள் அவற்றை உரிய காலத்திலும் தகுந்த அளவையும் பயன்படுத்தி விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற்று லாபம் என்றும் அறுவடைக்குப் பின் விதைக்குவியல்களை முளைப்புத்திறன் குறையாமல் கலவன் இல்லாமல் பாதுகாக்கும் முறைகள் குறித்து எடுத்துக் கூறினார். இதில் விதைச்சான்று அலுவலர்கள் திருவையாறு மணிமேகலை, பூதலூர் மகேஸ்வரி மற்றும் திருவையாறு வட்டார விதைப் பண்ணை விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை உதவி விதை அலுவலர் ஜான் ஜெயக்குமார், உதவி வேளாண்மை அலுவலர் ஐஸ்வர்யா ஆகியோர் செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# புதுக்கோட்டை வட்டாரத்தில் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம்



புதுக்கோட்டை, செப்.24

வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் அட்மா மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறு துணை சீரமைப்புத் திட்டத்தின் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், புதுக்கோட்டையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் சி.ஜெயபாலன் தலைமையேற்று அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். அட்மா வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு உறுப்பினர்கள் தலைவர் மு.கலியமூர்த்தி முன்னிலை வகித்தார் மற்றும் இக்கூட்டத்தில் வடக்கு ஒன்றிய செயலாளர் சாமிநாதனும் கலந்து கொண்டார்.

புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு.அன்பரசன் வரவேற்று நடப்பு ஆண்டில் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்ட செயல்பாடுகள் குறித்து உறுப்பினர்களிடம் கலந்து ஆலோசனை செய்தார். அதன்பின் பெ.பூபதி, உதவிப் பொறியாளர் வேளாண்மை பொறியியல் துறை அத்துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு மானியத் திட்ட விவபரங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துகூறினார். மேலும் புதுக்கோட்டை வட்டார தோட்டக்கலை அலுவலர் போ.மதுமிதா, துறையில் செயல்படுத்தப்படும் திட்ட செயல்பாடுகள் மற்றும் மானிய விபரங்கள் குறித்து எடுத்துக்கூறினார். அதனைத் தொடர்ந்து புதுக்கோட்டை வட்டார வேளாண்மை அலுவலர் த.ஸ்வர்ணா வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் மானியத் திட்ட விபரங்கள் குறித்து விளக்கமளித்தார். இறுதியாக துணை வேளாண்மை அலுவலர் திருப்பதி வேளாண் விற்பனைமற்றும் வணிகம் கலந்து கொண்டு விற்பனைத்துறையில் செயல்படுத்தப் படும் மானியத்திட்ட விபரங்கள் குறித்து விளக்கமளித்தார். முன்ன தாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் பா.தேவி அட்மா திட்டத்தில் 2024-25ம் ஆண்டிற்கான முதல் கட்ட நிதி விடுவிப்பு குறித்த தீர்மானங்களை உறுப்பினர்களிடம் ஒப்புதலுக்காக வாசித்தார். கூட்டத்தில் பல்வேறு கிராமங்களிலிருந்து 20க்கும் மேற்பட்ட வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ள அவர்கள் முன்னிலையில் 5 தீர்மானங்கள் ஒரு மனதாக நிறை வேற்றப்பட்டது. கூட்ட ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் லா.அருளரசு மற்றும் ரா.ஸ்ரீநிதி ஆகியோர் செய்திருந்தனர்.

# வட்டார தொழில்நுட்ப குழு மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம்

மதுரை, செப்.24

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் 2024-25ம் ஆண்டு நிதியின் கீழ் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் தே.கல்லுப்பட்டியில் வட்டார தொழில்நுட்ப குழு மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் ஒருங்கிணைப்பாளர் / வேளாண்மை உதவி இயக்குநர் மா.விமலா தலைமையில் நடைபெற்றது. ATMA – திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்ட செயல் பாடுகள் பற்றியும் வேளாண்மைத் துறையின் மூலம் செயல் படுத்தப்படும் மானிய திட்டங்கள், விவசாயிகள் தாங்கள் வாங்கும் வேளாண் இடுபொருட்களுக்கு பணமில்லா மின்னணு பரிவர்த் தனைகள் மூலம் அரசு கணக்கில் செலுத்தி இடுபொருட்களை பெறுவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என கூறினார். சிறப்பு விருந்தினராக கால்நடை பாராமரிப்புத் துறை உதவி இயக்குநர் டாக்டர். எம்.எஸ். சரவணன், கால்நடை பாராமரிப்பு துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், கால்நடைகள் சார்ந்த தொழில் மேற்கொள்ள முனைவோர் (NLM) – தேசிய கால்நடை திட்டத்தில் பதிவு செய்து மானியத்தைப் பெறலாம் என்று கூறினார். கால்நடை முகாம்கள் நடத்துவது பற்றி கால்நடை உதவி மருத்துவர் பெ.இராஜ்குமார் கூறினார். தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை மூலம் விதைகள் மானியத்தில் வழங்குவது ATMA – திட்டத்தில் வெண்டையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப் பள்ளி நடத்துவது பற்றி பி.வைஷ்ணவி, தோட்டக்கலை அலுவலர் கூறினார். மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் பஞ்சாயத்து கண்மாய்கள் மூலம் மீன் வளர்ப்பது, வண்ண மீன்கள் வளர்க்க மானியம் பெறுவது பற்றி மீன் வள மேற்பார்வையாளர் வெ.மகேஷ் கூறினார். வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறையின் மூலம் உழவர் சந்தையில் விவசாயிகளுக்கு உழவர் அடையாள அட்டை வழங்குதல், ஒழுங்குமுறை விற்பனைக்கூட செயல்பாடுகள் பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங் களுக்கான திட்டம் (PMFME) மூலம் தொழில் தொடங்குவது பற்றி உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) கி.ஆதிநாராயணன் எடுத்து கூறினார்.

ம.ஹேமலதா, வட்டார தொழில் நுட்ப மேளாலர் கலந்து கொண்டு வட்டார தொழில்நுட்ப குழு உயர் அலுவலர்கள் மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு கூட்ட விவசாயிகளுக்கு ன்றியுரை வழங்கினார்.

# புதுக்கோட்டை வட்டாரத்திலிருந்து கந்தர்வகோட்டை கோழிப்பண்ணைக்கு கண்டுணர்வு பயணம்



புதுக்கோட்டை, செப்.24 வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் அட்மா மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் மூலம் கந்தர்வகோட்டை, புதுநகரில் உள்ள வினோத் கோழிப்பண்ணைக்கு கண்டுணர்வு பயணம் புதுக்கோட்டை வட்டாரம், ஆதனக்கோட்டை. மங்களத்துப்பட்டி, வண்ணாரப்பட்டி ஆகிய கிராமங்களிலிருந்து இலாபகரமான கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பில் ஒரு நாள் கண்டுணர்வு பயணமாக 50 விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு எஸ்.குமார், பண்ணை மேளாளர், கோழி குஞ்சுகள் எங்கிருந்து வாங்கப் படுகிறது, எத்தனை நாட்களில் முட்டைக்கு வரும், ஒரு கோழி எவ்வளவு 1 டி வருட வயதுடையது என்றும் அது வாழ்நாளில் 320 முட்டைகள் வரை இடும் எனவும் அதன் பிறகு அந்த கோழி கறிக்கு கிலோ உயிருடன் ரூ.120/- வரை விலை போகும் என்றும், ஒரு கோழிக்கு அதன் வாழ்நாளில் 46 கிலோ வரை தீவனம் தேவைப்படும் எனவும் விளக்கமளித்தார். அதனைத் தவிர கோழிகளுக்கு தீவனம் கலக்கும் முறைகள் குறித்து விளக்கமளித்தார்.

தொடர்ந்து பி.ராஜா, பண்ணை மேலாளர், கோழிகள் இருக்கும் அறைகளை அதன் வயதிற்கு ஏற்ப பிரித்து அதற்கு தீவனம், கோழிகளுக்கு தடுப்பூசி போடும் காலம், முட்டை இடும் அறை அதனை பிரித்தெடுக்கும் முறை போன்ற பல்வேறு தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மூலம் செய்து காண்பித்தார்கள்.

கண்டுணர்வு பயணத்திற்கான ஏற்பாடுகளை புதுக்கோட்டை வட்டார தொழில்நுட்ப மேலாளர் பா.தேவி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ல.அருளரசு மற்றும் ரா.ஸ்ரீநிதி ஆகியோர் செய்து விவசாயிகளை அழைத்துச் சென்று வந்தனர். கண்டுண்வு பயணத்தில் விவசாயிகள் பல்வேறு சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டார்கள்.